சார்பகந்தா

1. வெட்டுப்புழு:

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் இளங்கன்றுகளைத் தாக்கும்
- புழுக்கள் இரவுண்ணும் பழக்கம் உடையவை. தாவரத்தின் அடியில் உள்ள குப்பைகளில் கிடக்கும்
- கன்றுகளை தரைமட்டத்தில் வெட்டிவிடும்
- நீர்தேக்கம் அதிகமாக உள்ள பள்ளமான இடங்களில் தாக்கம் அதிகமாக இருக்கும்

**பூச்சியின் விபரம்:**

- முட்டைகள் உருண்டை வடிவாகவும், வெள்ளை நிறமாகவும் காணப்படும்
- இளம் புழுக்கள் தழைகளை நன்கு உண்ட பிறகு மண்ணுக்குள் புகுந்துவிடும்

கட்டுப்படுத்தும் முறை:

- பறவை இரைவிழுங்கிகள் புழுக்களையும் கூட்டுப்புழுக்களையும் உண்ணும் வகையில் மண்ணை கிளரிவிட வேண்டும்
- அந்துப்பூச்சிகளை விளக்குப்பொறி வைத்து கவர்ந்து அழிக்கலாம்
- இனக்கவர்ச்சிப் பொறி எக்டர்க்கு 20 வைத்து ஆண் அந்துப்பூச்சியை கண்காணிக்கவும் செய்யலாம்
- பகல் நேரங்களில் நீர்பாய்ச்சினால் வெளியே தெரியும் புழுக்களை பறவைகள் உண்ணும்
- குளோர்பைரிபாஸ் (அ) என்டோசல்பான் 2 மி.லி / லிட்டர் நட்ட பிறகு தெளிக்கவும்

2. கொம்புப்புழு, டெலிபிலா நெரி

சேதத்தின் அறிகுறி:

- புழுக்கள் இலைகளை உண்ணும்

**பூச்சியின் விபரம்:**

- புழு பெரியதாகவும் அதன் பகுதியில் கொம்பு காணப்படும்
- அந்துப்பூச்சி பெரியதாகவும் மஞ்சள் வண்ண குறியீட்டுகளுடனும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- மண்ணை கிளரி விட்டால் பறவைகள் கூட்டுப்புழுக்களை உண்ணும்
- கையால் புழுக்களை பொறுக்கி அழிக்கவும்
- விளக்குப்பொறி அமைக்கலாம் 1 / எக்டர்
- வரப்பை சுற்றி அரளி நட்டால் பயிரை பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கும்

3. **கத்தரி புள்ளி வண்டு, ஹினோசெபிலேக்னா விஜின்சிகூக்டோபங்டேட்டா:**

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்களும், வண்டுகளும் இலைகளில் உள்ள பச்சையத்தை உண்ணும்
- இலைகளை சட்டமாக்கி பின்பு காய்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

புழுக்கள் - பெரிதாகவும், மஞ்சள் நிறமாகவும், உடம்பில் முள் தோன்றும்

வண்டு - ஊதா வெளுப்பு நிறத்தில் உருளையாகவும், கரும்புள்ளிகளுடன் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- புழுக்களையும் வண்டுகளையும் சேகரித்து அழித்து விடவும்
- கார்பரில் 3 கிராம் / லிட்டர் + நனையும் கந்தகம் 2 கிராம் / லிட்டர் (அ) என்டோசல்பான் 2 மி.லி / லிட்டர்

4. **சாம்பல் கூன்வண்டு, மில்லோசெரஸ் விரிடென்ஸ்**

**சேதத்தின் அறிகுறி:**

- வண்டுகள் இலைகளின் ஓரத்தில் உண்ணும்
- புழுக்கள் வேர்களை உண்ணுவதால் தாவரம் காய்ந்துவிடும்

**பூச்சியின் விபரம்:**

- வண்டுகள் சிறியதாகவும் இளம் பச்சை நிறத்திலும் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- வண்டுகளை சேகரித்து அழித்துவிடவும்
- கார்பரில் 0.2 சதவிதம் (அ) மாலத்தியான் 0.1 சதவிதம் தெளிக்கவும்
- 0.1 சதவிதம் குளோர்பைரிபாஸ் மண்ணில் கலந்தால் கட்டுப்படுத்தலாம்

5. **மாவுப்பூச்சி, காக்சிடோஹிஸ்டிரிக்ஸ் இன்சொலிடா**

**சேதத்தின் அறிகுறி:**

- குஞ்சுகளும் வண்டுகளும் இலையில் அடிப்பகுதியில் இருந்து சாற்றினை உறிஞ்சும்
- தாக்கப்பட்ட பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறி காய்ந்துவிடும்
- தேன் துளிகளினால் கரும்புகைப் பூசணம் இலைகளில் தோன்றும்

**பூச்சியின் விபரம்:**

- மாவுப்பூச்சிகள் சிறியதாகவும், அதன் உடம்பில் வெள்ளை மாவு போன்ற மெழுகு காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- தாக்குதலின் முதல் பருவத்திலேயே தாக்கப்பட்ட பகுதிகளை அழித்துவிடவேண்டும்
- டைமிதோயேட் 0.05 சதவிதம் (அ) மெதில் டெமடான் 0.05 சதவிதம் (அ) மாலத்தியான் 0.1 சதவிதம்

- பொறிவண்டுகளை களத்தில் விடலாம்
- வேப்பம் எண்ணெய் 5 மி.லி (அ) மீன் எண்ணெய் ரோசின் சோப்பு 25 கிராம் / லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கலாம்